**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.191/17** P.W. 10

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. டாக்டர். ரெத்தினசபாபதி | Father's / Husband Name | . ராமசாமி |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |
| Date | :01.08.2019 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 01.08.2019.

**முதல் விசாரணை.**

நான் முன்பு தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமனையில் முடநீக்கியல் துறையில் பேராசிரியராக பணிபுரிந்தும் பணி ஓய்வு பெற்று தற்பொழுது தஞ்சை தனியார் ரோகினி மருத்துவமனையில் முடநீக்கியல் துறையில் மருத்துவராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 13.9.2010 அன்று பன்னீர்செல்வம் என்பவர் முன்னதாக நாகை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பிறகு திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக தஞ்சை ரோகினி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு நான் 13.9.2010 அன்று மாலை 4.05 மணியளவில் முதலுதவி சிகிச்சை அளித்தும் அவரை உள்நோயாளியாக அனுமதித்துள்ளேன். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரை நான் விசாரித்தும் அவருக்கு எப்படி காயம் பட்டது என்று கேட்டேன். அதற்கு அவர் 11.9.2010 அன்று காலை 11.30 மணியளவில் தனக்கு தெரிந்த நபர்களால் உருட்டுக்கட்டையால் தாக்கப்பட்டதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாக என்னிடம் சொன்னார். அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு ரத்த கசிவு உள்ளதாக சொன்னார். அவருக்கு நான் பரிசோதனை செய்தபோது ரத்த அழுத்தம் அதிகமாக காணப்பட்டது. சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயம் 1. இடது பக்க தலையில் நடுப்பகுதியில் வீக்க காயம் காணப்பட்டது. அந்த இடத்தில் வலி இருப்பதாக கூறினார். 2. வலது கையில் அசைவு குறைந்தும் வலி இருப்பதாக கூறினார். அவரை அவசர சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக சேர்த்துள்ளேன். அவருக்கு சிடிஸ்கேன் எடுத்துப்பார்த்ததில் இடது பக்க மூளையில் நீளமான எலும்பு முறிவு கபால எலும்பில் காணப்பட்டது. மேலும் இடது பக்க மூளைபகுதயில் EDH அதாவது Epidural Haemmorhage ஏற்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் அவருக்கு தலைகாய சிறப்பு மருத்துவர் மத்தியாஸ் ஆர்தர் நீயூரோ சர்ஜன் மூலமாக மூளை பகுதியில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு ரத்த வீக்க காயம் சரிசெய்யப்பட்டது. பன்னீர்செல்வத்திற்கு 13.9.2010 அன்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டும் சிகிச்சை அளிக்கப்பட்டு 30.9.2010 அன்று மருத்துவமனையில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். பன்னீர்செல்வத்திற்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு நகல் அதசாஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு வழங்கப்பட்ட காயச்சான்று அதசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று

காயச்சான்றில் குறிப்பிட்டுள்ளேன். அவருக்கு நான் பணிபார்க்கும் மருத்துவமனையான ரோகினி மருத்துவமனையில் வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் ஆப்பரேஷன் நோட்டு நகலை தாக்கல் செய்கிறேன். அது அதசாஆ.8 ஆகும். ( அதசாஆ.8ஐ பொறுத்து அது நகல் என்பதால் எதிரிகள்தரப்பில் குறியீடு செய்வதிலட் ஆட்சேபிக்கப்பட்டதால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆட்சேபனை குறித்து தீர்ப்பின்போது பரிசீலிக்கப்படும். ) இது வகைக்கு போலிசார் விசாரிக்க விபரம் சொன்னேன். பன்னீர்செல்வத்திற்கு ஏற்பட்ட காயங்கள் பொறுத்து அவர் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சொன்ன ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்புண்டு.

**எதிரிதரப்புக் குறுக்கு விசாரணை**.

அதசாஆ.6 மற்றும் 7ல் முதலில் பன்னீர்செல்வம் நாகை அரசு மருத்துவமனையிலும் பின்னர் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவனையிலும் சிகிச்சை எடுத்துக்கொண்டது குறித்து சொல்லியுள்ளேன். திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவனையில் இருந்து காயம்பட்ட நபர் பரிந்துரை கடிதம் கொண்டுவந்தார். அந்த பரிந்துரை கடிதம் தற்பொழுது நான் கொண்டுவரவில்லை. திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவனையில் காயம் பட்ட பன்னீர்செல்வம் அவருக்கு ஏற்பட்ட காயம் பொறுத்து அங்கேயே பூரண குணமடைந்துவிட்டார் என்றும் அவருக்கு தலையில் EDH அதாவது Epidural Haemmorhage ரத்த உரைதல் எதுவும் காணப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பணிப்பார்க்கும் மருத்துவமனை தனியார் மருத்துவமனை என்றால் சரிதான். அந்த மருத்துவமனையில் வரும் நோயாளிகளை பொறுத்து வியாபாரம் குறைவு என்பதால் எல்லோரையும் உள்நோயாளியாக அனுமதித்து தேவையில்லாத சிகிச்சை வழங்குவது வழக்கம் என்றால் சரியல்ல. காயம் பட்டதாக சொல்லப்படும் நபர் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இதுபோன்ற ஆவணங்களை நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதசாஆ.8 டிஸ்சார்ஜ் சம்மரியில் நான் மிகைப்படுத்தி காயங்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. காயம் பட்ட பன்னீர்செல்வத்திற்கு ஏற்பட்ட காயங்கள் அவர் உயரமான பகுதியில் இருந்து தடுக்கி தடுமாறி கடினமான தரையில் கீழேவிழும் பட்சத்தில் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு. மோட்டார் சைக்கிளில் செல்லும்போது கீழேவிழும் பட்சத்திலும் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. No History of RTA என்ற வாசகத்தை நான் அதசாஆ.8ல் விரிவாக எழுதவில்லை என்றால் சரிதான். ஆனால் சுருக்கொப்பத்தில் குறிப்பிட்டுள்ளேன். அதில் Assault என்றும் குறிப்பிட்டுள்ளேன். மேற் சொன்ன ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்ட தேதியில் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால்

சரியல்ல. அதனால்தான் அசல் ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.